DEPOSITION OF WITNESS
CHAPTER CODE OF CIVIL PROCEDURE
IN THE COURT OF THE PRINCIPAL DISTRICT JUDGE, THENI.
**O.S. No.19/2021**

Deposition of Witness : P.W. 2

| | |
|---|---|
| Name - **திரு.சின்னராஜ்** | Father's Name - **திரு.** |
| Village - | Taluk- |
| Caste - | Calling - |
| Religion - | Age- |

Solemnly affirmed in accordance with the provisions of Act x of 1873 of the day of **06.03.2026**

**(சாட்சி அழைக்கப்பட்டு சத்தியபிரமாணம் செய்யப்பட்டார் )**

**முதல் விசாரணை –**

1. எனக்கு வாதி ராஜேஷ் கண்ணாவை சுமார் 15 ஆண்டுகளாக தெரியும். வீரசின்னம்மாள்புரம், அரண்மனைபுதூரில் நான் குடியிருந்து வருகிறேன். ரியல் எஸ்டேட் தொழில் செய்து வருகிறேன். ராஜேஷ் கண்ணாவை சுமார் 6 ஆண்டுகளுக்கு முன்பு நான் பார்க்கச் சென்றிருந்தேன். அவ்வாறு அவரைப் பார்த்தபோது அவர் என்னை ஆண்டிபட்டிக்கு போகலாம் என சொன்னார். 2019 ம் ஆண்டு எனக்கு தேதி, மாதம் சரியாக ஞாபகம் இல்லை.

2. ஆண்டிப்பட்டி பக்கத்தில் உள்ள எரத்திம்மங்காள் பட்டிக்கு என்னை அழைத்துச் சென்றார். அங்கு கோவிந்தராஜ் என்பவரது பண்ணை வீட்டில் அவரது குடும்பத்தார் சுமார் 5–6 நபர்கள் இருந்தார்கள். அவரிடம் இடம் பேசி இருப்பதாகவும் அந்த இடத்தை வாங்குவதற்காக கையில் ரூ.15 லட்சம் ரூபாய் பணம் வாங்கி வைத்திருந்தார். அந்த இடமானது சடையால் முனீஸ்வரன் கோயில் பக்கத்தில் உள்ள திட்டச்சாலையில் அமைந்துள்ளது. அந்த சொத்து கோவிந்தராஜ் என்பவருக்கு சொந்தமானது. அந்த சொத்தானது கணவன் மனைவிக்கு பாத்திமானதென்று என்னிடம் வாதி ராஜேஷ் கண்ணன் தெரிவித்தார்.

3. பிரதிவாதி தரப்பில் ஏற்கனவே பத்திரம் தயாராக வைத்திருந்தார்கள். நான் திடீரென்று இடையில் சென்றதால் எனக்கு முழு விவரங்கள் தெரியாது.. ராஜேஷ் கண்ணன் அந்த பத்திரத்தை படித்து பார்த்துவிட்டு கையெழுத்து போட்டார். முதல் பிரதிவாதி கோவிந்தராஜ் என்பவரும் அந்த பத்திரத்தில் கையெழுத்து போட்டார். அவரது மனைவி செண்பகவள்ளி என்பவரும் கையெழுத்து போட்டார், அவர் மகள் என்று ஒருவர் இருந்தார், அவரும் கையொப்பம் போட்டார். மற்றொரு குடும்ப உறுப்பினர் என்று ஒரு நபர் இருந்தார். அவர் பெயர் ராமகிருஷ்ணன் என்று எனக்குச் சொன்னார்கள். பேசி விட்டு ஆவணத்தை கொடுத்தார்கள், நாங்கள் வாங்கிக் கொண்டு வந்து விட்டோம். பின்னர் ராஜேஸ் கண்ணன் அவரது அலுவலகத்திற்கு வந்துவிட்டார். நான் எனது வீட்டிற்கு வந்து விட்டேன். ராஜேஷ் கண்ணன் ரியல் எஸ்டேட் தொழில் தான் செய்து வருகிறார்.

**வழக்கறிஞர் வேண்டுகோளுக்கிணங்க குறுக்கு விசாரணையானது ஒத்தி வைக்கப்படுகிறது.**

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்லச் சொல்ல என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு, சாட்சிக்கு படித்துக் காட்டப்பட்டு, அவரால் சரி என ஒப்புக்கொள்ளப்பட்டு என் முன்னால் சாட்சியால் கையொப்பமிடப்பட்டது.

SWARNAM J NATARAJAN

Digitally signed by SWARNAM J NATARAJAN
Date: 2026.03.06 15:20:02 +0530

முதன்மை மாவட்ட நீதிபதி,
தேனி.